

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர். அ.சுபேர்கான், தமது பிறந்தநாளை யொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# வேலூர் - நெய்வேலி விமான நிலையங்கள் இயங்கப்போவது எப்போது?

## மக்களவையில் — தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, மார்ச்.14–

தமிழ்நாட்டில் உள்ள வேலூர், நெய்வேலி விமான நிலையங்களை செயல்பாட்டிற்கு கொண்டுவருவதில் நீண்டகால தாமதம் ஏற்படுவது ஏன்? என்றும் அதிகரித்து வரும் விமானப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கூடுதல் விமான சேவைகளுக்கு அனுமதி அளிக்க ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன என்றும் மக்களவையில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய



சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் எம்.பி. கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் வருமாறு:–

UDANRCS என்ற ஒன்றிய அரசின் விமான சேவை திட்டத்தின்கீழ் தொடர்ந்து அறிவிப்புகள் வெளியிடப்பட்ட போதிலும், தமிழ்நாட்டில் உள்ள வேலூர் மற்றும் நெய்வேலி ஆகிய விமான நிலையங்களுக்கு உரிமம் வழங்குவதிலும், அவற்றைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவருவதிலும் ஏற்பட்டுள்ள நீண்டகால தாமதம் குறித்து ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன? அவ்வாறு இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன? குறிப்பிட்ட அந்த விமான நிலையங்களுக்கு உரிமம் பெறுவதற்கும், செயல்பாட்டு அனுமதி பெறுவதற்கும் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் குறித்த விவரங்கள் என்ன? மேலும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட தேதிகள், அதுகுறித்து ஆய்வுகள், குறைபாடுகள், அதன் தற்போதைய நிலை, தாமதத்திற்கான காரணங்கள் என்ன? மற்றும் இறுதி ஒப்புதல் மேற்கொள்ளப்பட்ட சுட்டிக்காட்டப்பட்ட வழங்குவதற்காக திருத்தப்பட்ட காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளதா?

விமான போக்குவரத்து மண்டல இணைப்பு திட்டங்களில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக, வடக்கு மற்றும் மத்திய தமிழ்நாட்டிற்கு ஏற்படும் பொருளாதார இழப்பீட்டை அரசு மதிப்பிட்டுள்ளதா? ஆம் எனில், அது குறித்த விவரங்கள் என்ன?

அதிகரித்து வரும் விமானப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், சேலத்திலிருந்து சென்னைக்கும், மதுரையிலிருந்து சென்னைக்கும் கூடுதலாக திட்டமிடப்பட்ட விமானச் சேவைகளை அறிமுகப்படுத்தவோ அல்லது ஒப்புதல் அளிக்கவோ அரசு உத்தேசித்துள்ளதா? ஆம் எனில், அது குறித்த விவரங்கள் மற்றும் நிர்ணயிக்கப் பட்ட காலக்கெடு விவரங்கள் என்ன?. இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஒன்றியம் பூம்புகார் ஊராட்சிக்கு உட்பட்ட மேலையூரில் 13.50 லட்சம் மதிப்பீட்டிலான கூடுதல் நியாய விலைக் கட்டிடத்தை மயிலாடுதுறை மாவட்டச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் திறந்து வைத்தார். உடன் நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, சீர்காழி ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் கமலஜோதி தேவேந்திரன், சீர்காழி கிழக்கு ஒன்றியச் செயலாளர் பஞ்சு.குமார், கொள்ளிடம் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் ஜெயபிரகாஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### 7 இடங்களில் திறப்பு! 11 இடங்களில் அடிக்கல்! - 21,600 பேருக்கு வேலைவாய்ப்பு!

# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் 18 இடங்களில் டைடல் பூங்காக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, மார்ச் 14 -**

**‘திராவிட மாடல்’ ஆட்சியில் தமிழ்நாட்டில் 7 இடங்களில் டைடல் பார்க் திறக்கப்பட்டும், 11 இடங்களில் நியோ டைடல் பார்க்கிற்கு அடிக்கல் நாட்டியும் 21,600 பேருக்கு வேலை வாய்ப்புக்கு அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் பொங்க தமது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட் டுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

கணினித் துறையில் தமிழ்நாடு உயர்ந்திடத் தலைவர் கலைஞரின் தொலைநோக்குப் பார்வையில் உருவானவை டைடல் பூங்காக்கள்.

கடந்த 2016 - 21 அ.தி.மு.க. ஆட்சியின் இறுதிக்காலத்தில் ஒரே ஒரு டைடல் பூங்காவுக்கு மட்டுமே அடிக்கல் நாட்டினர்.

நமது #DravidianModel ஆட்சியில், அவர்கள் அடிக்கல் நாட்டிய பட்டாபிராம் டைடல் பூங்காவை விரைந்து முடித்துத் திறந்தது மட்டுமல்ல,




விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், தூத்துக்குடி, திருப்பூர், வேலூர், காரைக்குடி ஆகிய ஏழு இடங்களில், சுமார் 4,200 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கும் #NeoTIDELParkகளை நிறுவித் திறந்து வைத்துள்ளோம்.

இதுமட்டுமின்றி, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இரண்டு இடங்களில், சுமார் 12,000 பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கும் TIDELParkகளும், திருவண்ணாமலை, இராசிபுரம், நாகர்கோயில், திருநெல்வேலி, விருதுநகர், ஈரோடு, கரூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் ஆகிய ஒன்பது இடங்களில், சுமார் 5,400 பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கும் #NeoTIDELPark உம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது.

வளர்ச்சியைப் பரவலாக்கி, அனைத்து மாவட்டங்களையும் அனைத்துத் தரப்பு மக்களையும் முன்னேற்றுவோம்! மாபெரும் தமிழ்க் கனவைச் சாத்தியப்படுத்துவோம்! #வெல்வோம்_ஒன்றாக!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### ஜம்மு - காஷ்மீர் முன்னாள் முதல்வர்

# ஃபரூக் அப்துல்லா மீது தாக்குதல்!


## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

*சென்னை, மார்ச் 14-*

*ஜம்மு - காஷ்மீர் முன்னாள் முதல்வர் ஃபரூக் அப்துல்லா மீதான கொலை வெறித் தாக்குதலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*ஜம்மு - காஷ்மீரில் ஆளும் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவரும், அம்மாநில முன்னாள் முதலமைச்சருமான பரூக் அப்துல்லா, 11.03.2026 அன்று ஜம்மு கிரேட்டர் கைலாஷ் பகுதியில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.*

*அப்போது, அங்கிருந்த ஒரு நபர் திடீரென பரூக் அப்துல்*



*லாவை நோக்கி வந்து அவரை துப்பாக்கியால் சுட முயன்றார்.*

*உடனிருந்த பாதுகாப்புப் படையினர் அந்த நபரை மடக்கிப் பிடித்து கைது செய்தனர்.*

*இந்நிலையில், சமூக வலைதளப் பதிவொன்றை வெளியிட்டுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின், பரூக் அப்துல்லா மீதான படுகொலை முயற்சியை வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஜனநாயகத்தில் இதுபோன்ற வன்முறைச் செயல்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.*

*அவர் பாதுகாப்பாக இருக்கிறார் என்பதை அறிந்து நிம்மதியடைந்தேன். அவருக்கும் உமர் அப்துல்லாவுக்கும் தனது ஆதரவை தெரிவித்துக்கொள்வதாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.*

கைத்தறி ஆடையை உடுத்துவோம்! நெசவாளர் வாழ்வை உயர்த்துவோம்!!

தமிழக கைத்தறி நெசவாளர்களுக்கு
**பேரறிஞர் அண்ணா** அவர்கள் காட்டிய வழியில்,
தலைவர் **கலைஞர்** அவர்கள்
கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கையில் ஒளி விளக்கு ஏற்றிட,
கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களை அமைத்து,
அந்த சங்கங்கள் மூலமாக அவர்கள் வாழ்வு மேம்படச் செய்த
**டாக்டர் கலைஞர்** அவர்கள் வழியில்,
இன்றைக்கு ஓய்வூதியம் பெறும் கைத்தறி நெசவாளர்களுக்கு
மாதம் 2000 ரூபாய் நிதி உதவி வழங்கிய தாய் உள்ளம் கொண்



மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கும்,
மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
திரு.**உதயநிதி ஸ்டாலின்** அவர்களுக்கும்,
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்
திரு. **R.காந்தி** அவர்களுக்கும்
எங்கள் நெஞ்சார்ந்த நன்றி! நன்றி! நன்றி!



இவண்
ஈரோடு மாவட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்கள் சங்கம்